ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2259/35 - 2021 දෙසැම්බර් මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.12.23

*2259/35 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் எம்பிலிபிட்டிய நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

எம்பிலிபிட்டிய நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, நகர சபைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ், கௌரவ ஆளுநரினால் தவிசாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதன் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், எம்பிலிபிட்டிய நகர சபையின் இலக்கம் 03, கலகெடிஆர வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட வவுலன்பொக்க கமகே லலித் தர்மகீர்த்தி என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான எம்பிலிபிட்டிய நகர சபையின் இலக்கம் 03, கலகெடிஆர வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஜாகொட ஆரச்சிகே கெலும்சந்ர என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

எம்பிலிபிட்டிய நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சுரங்க அம்பகஹதென்னே ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஜாகொட ஆரச்சிகே கெலும்சந்ர என்பவர் எம்பிலிபிட்டிய நகர சபையின் இலக்கம் 03, கலகெடிஆர வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சுரங்க அம்பகஹதென்னே,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
எம்பிலிபிட்டிய நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
*2021, திசெம்பர் 22.*

EOG 12-0253

1A - G 35641 — 20 (2021/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*